**தலைப்பு 124 – சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 124 – சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 ஆகஸ்ட் 19 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வினதும், கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்படுத்துதல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

---

அமைச்சிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 29,135.24 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 28,429.81 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டிருந்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 705.43 மில்லியன் அதாவது 2.42 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 10,853.81 | 10,620.86 | 232.95 | 2.15 |
| மூலதனம் | 18,281.43 | 17,808.95 | 472.48 | 2.58 |
| மொத்தம் | **29,135.24** | **28,429.81** | **705.43** | **2.42** |

### 2.2 முற்பணக் கணக்கு

### 2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சிற்குரிய 12401 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 9.11 | 9.06 | 5.91 | 11.16 | 45.00 | 32.13 |

### 2.3 பொது வைப்புக் கணக்குகள்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சின் கீழான 05 பொது வைப்புக் கணக்குகளின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 5.66 மில்லியன் கூட்டுமொத்தமாக இருந்தது.

| கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0002/0129/000 | 1.33 |
| 6000/0000/00/0013/0086/000 | 0.03 |
| 6000/0000/00/0015/0037/000 | 0.03 |
| 6000/0000/00/0016/0078/000 | 3.67 |
| 6000/0000/00/0019/0020/000 | 0.60 |
| மொத்தம் | 5.66 |

## 2.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்

சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்படத் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

அமைச்சினால் கீழே காண்பிக்கப்படுகின்ற பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாக்கப்பட்டும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|
| நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை |
| கணனிகள், உப பாகங்கள் மற்றும் மென் பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை |
| இழப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 |

### 3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பற்றுச்சீட்டுக்கள், பட்டியல்கள், பகிர்ந்தளித்தல் பதிவேடு, செயல்முன்னேற்ற அறிக்கை போன்ற தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 45,000 கூட்டுத்தொகைக்குரிய 02 கொடுக்கல் வாங்கல்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது.

### 3.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

12401 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 இல் சேவையை விட்டுச் சென்ற, உத்தியோகத்தர்களிடமிருந்து அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 45,306 ஆக இருந்தது. அந்நிலுவை மீதிகள் 2 ஆண்டுகள் முதல் 13 ஆண்டுகள் வரையான காலமாக இருந்து வந்த போதிலும், அந் நிலுவையான கடன் மீதிகளை அறவிடுவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2014 ஆகஸ்ட் மாதத்தில் சேவையிலிருந்து ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 163,105 ஆன கடன் மீதி 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் அறவிடுவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) முற்பணக் கணக்கின் சீராக்கக் குறிப்பாக காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 58,859 ஆன மீதியை இனங்காணப்பட்டு சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | |
| நிதிப் பிரமாணம் 752(2) | - | அமைச்சின் வருடாந்த பொருள் மெய்மையாய்வின் போது இனங்காணப்பட்ட 20 மிகைகள் மற்றும் 10 குறைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) தேசிய பாதீட்டு சுற்றறிக்கை | | |
| 2012 பெப்ரவரி 16 ஆந் திகதிய 156 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தி | 99,560 | தேவையற்ற செயற்பாடுகளுக்காக செலவினம் மட்டுப்படுத்தப்பட வேண்டிய போதிலும், இரண்டு அமைச்சர்களின் பதவியேற்பு விழா தொடர்பாக ரூபா 99,560 தொகை செலவிடப்பட்டிருந்தது. . |

**3.5 வெளிநாட்டு உதவி செயற்திட்டம்**

மீளாய்வாண்டின் போது அமைச்சினால் வெளிநாட்டு நிதியிட்டத்தின் கீழ் செயற்திட்டமொன்று செயற்படுத்தப்பட்டிருந்தது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம் அதன் மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 336,700,000 ஆக இருந்ததுடன், செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின்போது ரூபா 321,059,760

பயன்படுத்தப்பட்டிருந்தது. இந்த வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 இன் வருடாந்த மதிப்பீட்டின் கீழ் ‘‘திவி சவிய செயற்திட்டத்திற்காக ரூபா 101,000,000 நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியளவில் அதில் ரூபா 88,129,778 தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒதுக்கப்பட்டிருந்த நிதிஏற்பாட்டில் ரூபா 12,870,021 பயன்படுத்தப்படாமையால் செயற்திட்டத்திலிருந்து நிறைவேற்றப்பட வேண்டிய நோக்கங்கள் எதிர்பார்த்த அளவில் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வலது குறைந்த நபர்களுக்கு தொழிற்பயிற்சி வழங்குவதற்கான செயற்திட்ட உடன்படிக்கையின் கீழ் ரூபா 61,100,000 நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தும் அதில் ரூபா 45,446,760 மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 3.6 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை அமுல்ப்படுத்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரச சார்பற்ற நடவடிக்கைகள் தொடர்பான தேசிய செயலகத்தை ஸ்தாபிப்பதற்காக 2014 ஒக்தோபர் 16 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்றிருந்தது. அச் செயலகம் தொடர்பாக சட்டரீதியாக ஏற்றுக்கொள்ளலை பெற்றுக்கொள்வதற்காக தேவையான தேசிய கொள்கையொன்று தயாரிக்கப்பட்டு அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 பெப்ரவரி 22 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் இலங்கையில் குடும்ப கொள்கைக்காக வழிகாட்டி கோவையொன்றைத் தயாரித்து 02 மாதங்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தது. 2012 ஆம் ஆண்டிலிருந்து 2015 இறுதி வரை ரூபா 1,087,438 தொகை அச் செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்டிருந்தது. 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை அச் செயற்பாட்டை நிறைவேற்றுவதற்கு 03 வருடங்களும் 08 மாதங்களும் கடந்திருந்த போதிலும் குறித்த வழிகாட்டிக் கோவையின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) சமூக சேவைகள் அமைச்சு மற்றும் தென் மாகாண பொறியியல் செயற்பாடுகள் தொடர்பான மத்திய உசாத்துணை பணியகத்துடன் தெலம்புயாய தொழில் பயிற்சி நிலையத்திற்கு புதிய கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக 2013 திசெம்பர் 13 ஆந் திகதி ரூபா 174,820,800 இற்கு (பெறுமதி சேர் வரி தவிர்த்து) 365 நாட்களில் பூர்த்தி செய்யும் நிபந்தனையின் பேரில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2015 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் உரிய நிர்மாண நடவடிக்கைகளை பூர்த்தி செய்யும் சதவீதம் மகளிர் தங்குமிட விடுதி 72 சதவீதமும் ஆண்கள் விடுதி 13 சதவீதமுமாக இருந்ததுடன், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 50,200,000 செலவிடப்பட்டிருந்தது.

**3.7 செயலாற்றல்**

2015 இன் வருடாந்த மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், அமைச்சின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

(அ) **போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

அமைச்சினால் பிரதான செயற்பாடுகள் போதியளவில் நிறைவேற்றப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் சில கீழே காட்டப்பட்டுள்ளன.

(i) 70 வயதுக்கு மேற்பட்ட நிதியுதவி பெற்றுக் கொள்ளும் முதியோர் தொடர்பான தரவு முறைமையொன்றை தயாரிக்கப்பட்டு நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) தனிநபர் குடும்ப அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பயிற்சி மற்றும் அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவது தொடர்பாக 2013 ஆம் ஆண்டு முதல் 2015 வரையான காலப்பகுதியில் பௌதீக செயல்முன்னேற்றத்தை பரிசோதித்த போது நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் சில மாவட்டங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. அந்த எண்ணிக்கை முறையே 6, 4 மற்றும் 2 மாவட்டங்களாக படிப்படியாக குறைவடைந்திருந்தது.

(iii) 08 மாவட்டங்களுக்கு சிறுநீரக நோயினால் அவதியுறும் நோயாளிகளுக்கு மாதமொன்றுக்கு ரூபா 3,000 வீதம் வாழ்வாதார உதவி கொடுப்பனவிற்காக வருடாந்த மதிப்பீட்டின் மூலம் ரூபா 353,400,000 நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின்போது ரூபா 344,951,019 தொகை செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருந்த நிதிஏற்பாட்டில் ரூபா 8,448,981 பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iv) வருட ஆரம்பத்தின் போது அம்பாந்தோட்டை மாவட்டத்தில் சிறுநீரக நோயினால் அவதியுறும் நோயாளிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. 2015 ஆகஸ்ட் மற்றும் ஒக்தோபர் மாதங்களில் முறையே 550 மற்றும் 59 நோயாளிகள் இருப்பதாக புள்ளிவிபரங்களிலிருந்து வெளிப்படுத்தப்பட்டன. எவ்வாறாயினும் ஆண்டின் இறுதியின் போது மாவட்டங்களுக்கு அனுப்பிய நிதி ஏற்பாடுகளில் ரூபா 15,681,000 சேமிக்கப்பட்டிருந்த போதிலும் புதிதாக இனங்காணப்பட்ட நோயாளிகளுக்காக அந்நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

**(ஆ) திட்டமிடல்**

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க செயற்படாதிருந்த சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

(i) தனிநபர் குடும்ப அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 20 அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அதில் 13 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) சிறுநீரக நோயினால் அவதியுறும் நோயாளிகளுக்கு மாதாந்த நிதிஉதவி கொடுப்பனவு ஜனவரி மாதம் முதல் ஆரம்பிப்பதற்கு தேவையான நிதி ஏற்பாடு விடுவிக்கப்பட வேண்டிய போதிலும், அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களுக்காக ஜனவரி

மாதத்திற்கான நிதிஉதவிகளை வழங்குவதற்கு பெப்ரவரி 05 ஆந் திகதி நிதிஏற்பாடு விடுவிக்கப்பட்டிருந்தது ஏனைய மாவட்டங்களுக்காக ஜனவரி முதல் யூன் வரையான நிதி உதவிகளை செலுத்தவதற்கு நிதிஏற்பாடு விடுவிப்பதற்கு 2015 ஏப்ரல் மாதத்தின் போது மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்நிலைமை சிறுநீரக நோயாளிகளுக்கு நிதி உதவி வழங்குகையில் மாத்தளை, வவுனியா, முல்லைத்தீவு, அம்பாறை, திருகோணமலை மற்றும் குருணாகல் ஆகிய 06 மாவட்டங்களில் 04 மாதங்கள் முதல் 08 மாதங்கள் வரையான கால தாமதமொன்று இடம்பெற்றிருந்தது.

(iii) மீளாய்வாண்டின்போது 03 சந்தர்ப்பங்களில் 08 சிறுநீரக நோயாளிகள் தொடர்பாக சுகாதார அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த புள்ளிவிபரங்கள் அடிப்படையில் கொடுப்பனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் அந் நோயாளிகளுக்கு பணம் செலுத்தாதிருந்த ஐந்து மாதங்கள் பின்வருமாறு.

| **மாவட்டம்** | **மாத விபரம்** |
|---|---|
| வவுனியா | ஜனவரி - யூன், ஆகஸ்ட் |
| மாத்தளை | ஜனவரி – மார்ச் |
| குருணாகல் | ஜனவரி – மே, செப்தம்பர் |
| அம்பாறை | ஜனவரி – ஏப்ரல் |
| முல்லைத்தீவு | ஜனவரி – ஏப்ரல் |
| பொலன்னருவை<br>அநுராதபுரம் | ஜனவரி |

## 3.8 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

உதவியேற்பு விழாவொன்றிற்காக பத்திரிகையில் விளம்பரப் பிரசுரித்தமைக்காக ரூபா 508,533 செலவிடப்பட்டிருந்தது.

## 3.9 மனித வளங்கள் முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2015 திசெம்பர் 31 இல் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | **ஊழியர்களின் வகை** | **அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்** | **உள்ளபடியான பதவியணியினர்** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 48 | 39 | 09 |
| (ii) | மூன்றாம் நிலை | 05 | 03 | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 457 | 293 | 164 |
| (iv) | ஆரம்ப நிலை | 84 | 76 | 08 |
| (v) | ஏனையவை | 04 | 03 | 01 |
| | **மொத்தம்** | **598** | **414** | **184** |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் இறுதி அளவிலும் காணப்பட்ட 184 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு தவறியிருந்தது. இவ்வெற்றிடங்களில் 126 மதியுரை உத்தியோகத்தர் பதவிகளாக இருந்ததுடன், அவர்கள் பிரதேச செயலகத்திற்கு இணைக்கப்பட முடியாதிருந்தமையால் உரிய திட்டத்தை முறைப்படி செயற்படுத்த முடியாதிருந்தது.

(ii) சிரேஷ்ட மட்டத்தில் 09 வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் நீண்டகாலமாக காணப்படுகின்றமை பிரதானமாக அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் வருடாந்த செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் போதியளவு செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தமை அதில் தாக்கமளித்திருந்தது.

**(ஆ) விளைவற்ற மனித வளங்கள்**

---

2015 திசெம்பர் 21 ஆந் திகதிய 1933/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பின்னர் வீடமைப்பு மற்றும் சமூர்த்தி அமைச்சின் கிராமிய அபிவிருத்தி பிரிவில் சேவையில் ஈடுபட்டிருந்த 78 உத்தியோகத்தர்கள் இந்த அமைச்சிற்கு இணைக்கப்பட்டிருந்தனர். அவர்களுக்கு 2015 ஒக்தோபர் முதல் திசெம்பர் வரையான காலப்பகுதிக்காக முறையான கடமை கையளிப்பு இடம்பெற்றிருக்கவில்லை.